கேட்டறிந்து திட்டங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளிலே பலபல மாறுபாடுகளைச் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அவைகள் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது, அவைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி ஜில்லாவிலே மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே இது சரியாகப் பரிசீலிக்கப் பட்டதா? அங்கத்தினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள், அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே அங்கத்தினர் கள் அத்தனைபேரும் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை இந்த அரசாங் கத்திற்கு முதலாவதாக அனுப்பினார்கள். பின்னால் அவர்கள் கருத்தை மாற்றிக் கொண்டு ஒருவேளை வெளிநடப்பு செய்திருக்க லாம். அதைப்பற்றிப் புகார்கள் நமக்கு எதுவும் நேரடியாக வர வில்லை.

திரு. கோ. கருணைநாதன்: ஊராட்சி மன்றத் தேர்தலில் மாற்றம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அடுத்த கேள்வி அதன் தொடர்புடையது. ஊராட்சி மன்றத்திற்கான தலைவர் தேர்தலை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்ற அர சாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதற்கான சட்ட திருத்தம் விரைவில் வரும்.

* 327 *Q*.—THIRU **K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) whether the Government proposes to simplify the procedures relating to Panchayat and Panchayat Union Elections; and

(*b*) if so, what those new proposals are?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஊராட்சி மன்றத் தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையினைத் தவிர, நடைமுறை மாற்றம் எதுவும் செய்யும் செயற்குறிப்பு இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. கே. விநயகம்: அப்படி ஊராட்சிமன்றத் தலைவர் தேர்தல் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அதை இலாகா ஆர்டர் மூலமாகப் போட முடியாது. அதற்குத் தகுந்த மசோதா வர வேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த மசோதாவை நாமெல் லாம் கலைந்து போவதற்குள்ளாகக் கொண்டு வருவார்களா? அல்லது வேறு எப்பொழுதாவது சட்டசபையைக் கூட்டி அப்பொழுது கொண்டுவரப் போகிறார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தினுடைய சட்டதிட்ட விதிகளை மாற்றுவது என்னும் பொழுது அதற்கான மசோதாதை இந்தச் சபையிலே நிறைவேற்ற

வேண்டுமென்ற விதியைக்கூட நாங்கள் புரிந்துகொள்ளாமல் இருப்போம் என்று கருதுவது விந்தையாக இருக்கிறது. அந்தக் காரியம் நடைபெறும் சமயத்தில் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது இந்த மன்றத்தின் முன்னால் வைத்து நிறைவேற்றப்படும்.

தஞ்சாவூர் காந்தி மார்க்கெட்

* 328 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் அமைந்திருந்த காந்தி மார்க்கெட் என்பது காமராஜ் மார்க்கெட் என்று ஏன், எப்போது மாற்றப்பட்டது ?

(இ) அதை மீண்டும் காந்தி மார்க்கெட் என்று வழங்கச் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தஞ்சாவூரில் அமைந்திருக்கும் "காந்தி மார்க்கெட்" என்பது "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்படவில்லை. "கோட்டை காய்கறி மார்க்கெட்" என்பதுதான் "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்பட்டது. தஞ்சையில் மானம்புசாவடி என்ற வேறு இடத்தில் "காந்தி மார்க்கெட்" என்று ஒரு மார்க்கெட் இருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் தீப்பற்றி எரிந்ததாகச் செய்தி வந்ததே, அது காமராஜ் மார்க்கெட்டில்தானே. அப்பொழுது பத்திரிகைகளில் முன்னால் இது காந்தி மார்க்கெட் என்று இருந்து, அது காமராஜ் மார்க்கெட் என்று பின்னாலே மாற்றப்பட்டது என்று செய்திகள் வந்திருந்தன. அதுபற்றிய விவரம் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பத்திரிகைகளிலே வந்த செய்திகளை ஆதாரமானவைகளாக எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை.

Staff Inspection Wing in Finance Department

* 315*Q*.—THIRU G. GOMATHISANKARA DIKSHDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of this Government to have a Staff Inspection Wing in the Finance Department ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட உத்தேசம் தற்சமயம் இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃப் ஏற்படுத்தியிருப்பதைப் போல, இங்கேயும் ஏற்படுத்தி, ஸ்டாஃப்கள் தேவைக்குத் தகுந்தபடி இருக்கிறார்களா, கூடுதலாக வேண்டுமா, அல்லது குறைக்க